23 ஜூன் 2024
பொதுக்காலம் ஆண்டின் 12 ஆம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

newbec

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:**

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்

திருஅவையாக நம் குழந்தைகளை வளரவிடுங்கள்

# ஒவ்வொரு புயலின் மத்தியிலும் நான் இருக்கிறேன்

புயலின்போது கவிழ்ந்துபோகும் படகில் இருப்பதாகக் கற்பனை செய்து பாருங்கள். இன்றைய நற்செய்தியில் புயலும் பெருங்காற்றும் எழுந்து படகை நீரால் நிரம்பியதையும், மனிதராக இருந்த இயேசு தலையணையில் தலைவைத்துத் தூங்கிக்கொண்டிருந்தார் என்றும் வாசிக்கிறோம். இந்த நிகழ்ச்சியில் ஒரு திகைப்பூட்டும் உண்மை ஒன்று இருக்கிறது. தம்மைச் சுற்றியிருந்த குழப்பமான சூழ்நிலையில் இயேசு தூங்கிக்கொண்டிருந்தார். இதனால் தான் சீடர்கள், “நாங்கள் சாகப்போகிறோமே, உங்களுக்குக் கவலையில்லையா? என்று கத்தினார்கள்.



பெரும்பான்மையான நம் சூழலின் தாக்கம் நம்மை பயமுறுத்துவதாகவும் எச்சரிக்கை விடுப்பதாகவும் இருக்கலாம். நாம் நோயுற்றிருக்கலாம்; உடைந்துபோயிருக்கலாம்; தனிமை அல்லது நம்பிக்கையின்றி நசுக்கப்பட்டிருக்கலாம். நம்மைச் சுற்றிலும் இதுபோன்ற புயல்களினால் நம் வாழ்க்கையை சரியாக வழிநடத்தமுடியாது போகலாம். எங்கே தொடங்கவேண்டுமென்று கூட நாம் தெளிவற்றவர்களாக இருக்கலாம். சில சமயங்களில் இயேசு நம் நடுவிலிருந்து காணாமல் போயிருப்பதையும் அவரது உடனிருப்பையும் நம்மால் உணரமுடியாமல் இருந்திருக்கலாம்.

சீடர்களைப் போல சூழ்நிலை மற்றும் விளைவுகள் எதுவாக இருந்தாலும் இயேசு எப்போதும் நம்படகில் இருக்கிறார் என்ற உண்மையை நம் எண்ணத்தில் கொண்டுவரமுடியாது. மீண்டும் மீண்டும் இயேசு நம்முடைய சூழ்நிலைகளில் இருந்து தூக்கி மீட்டெடுத்துள்ளார். மீண்டும், **நம்முடன் நெருக்கமாக இருக்க அவர் விரும்புகிறார். நம் அருகில் நெருக்கமாகவும் இருக்கிறார்.**

அவரை நெருங்கிச் செல்லவும், அவரை அழைக்கவும், அவரில் நம்பிக்கை வைக்கவும் நம் கையில் வாய்ப்பு நமக்கு வழங்கப்பட்டுள்ளது. மிகவும் இக்கட்டான தருணங்களில் இயேசு நம்மை நோக்கி அடியெடுத்து வைத்த கதைகள் மிகவும் ஏராளம் உள்ளன. நம் வாழ்க்கை அதன்போக்கில் செல்கிறது. சில நிகழ்வுகள் இவ்வாறுதான் நடக்கவேண்டும் என்பதை நாம் அறிந்துள்ளோம். ஆனால் நம் வாழ்வில் புயல்கள் வரும்போது மட்டும் அவரை மறந்துவிடுகிறோம்; அவரை அழைப்பதில்லை. நம்வாழ்வின் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு நேரத்திலும் அவரை நாம் சார்ந்திருக்க வேண்டும்.

அவர் நமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார். நம்முடைய துயரநேரங்களிலும் சோதனைகளிலும், நம்வாழ்வில் ஏற்படும் புயல்களிலும் அவர் நம்முடன் நமக்காகக் காத்திருக்கிறார். நம் படகில் அவர் எப்போதும் இருக்கிறார். குறிப்பாக அவரில் நாம் நம்பிக்கை வைத்திருக்கும் நேரங்களில் நம்மோடு இருக்கிறார். நம் வாழ்வில் புயல் வீசுவதை நம்மால் தடுக்கமுடியாமல் போகலாம். ஆனால் புயலின் போது நம்மை எப்படிக் காப்பாற்றுவது என்று இயேசுவுக்கு நிச்சயமாகத் தெரியும். அப்படிப்பட்ட சமயத்தில் இயேசு தம் சீடர்களிடம் கூறியதையே நமக்கும் சொல்கிறார். “ஏன் அஞ்சுகிறீர்கள்? உங்களுக்கு இன்னும் நம்பிக்கை இல்லையா? எப்போதும் அவரில் நம்பிக்கை வைப்போம்.

குழந்தைகளை அன்பு செய்தால் மட்டும் போதாது. அவர்கள் அன்புசெய்யப்படுகிறார்கள் என்பதை அவர்கள் அறிந்திருப்பதும் அவசியம்.

– புனித ஜோன் போஸ்கோ







**இன்றைய இறைவார்த்தை:**

யோபு 38: 1,8-11

திபா: 107: 23-26,28-31

2 கொரி: 5: 14-17

மாற்: 4: 35-41

INTERNAL CIRCULATION ONLY
BUL 25/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org